# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## S.T.C. No.189/2023 P.W.3

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | மோகன் | த-பெ | ராஜூ |
| ஊர்: | : | வைரவபுரம் | | |
| வயது: | : | 50/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஓட்டுநர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.04.2026

**எதிரி ஆஜர்.**

------------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை .**

1. நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அசா1 எனது மனைவி. அசா2 எனது மூத்த மகன். பொதுவாக எனது மகன் நிரஞ்சன் என்பவர் சைக்கிளில் மகரிஷி பள்ளிக்கு சென்று வருவது வழக்கம். தேதி மாதம் நினைவில் இல்லை. 2023 ம் வருடம் ஒரு நாள் நான் என்னுடைய வேலையில் இருந்தபோது மாலை 4.00-4.30 மணியளவில் என்னிடம் செல்போனில் தொடர்பு கொண்டு எனது மூத்த மகன் நிரஞ்சன் என்பவருக்கு நான்கு சாலை வசந்தீஸ் பேக்கரி அருகில் பள்ளி முடித்துவிட்டு சென்று கொண்டிருந்தபோது அரசு பேருந்து ஒன்று அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும் காவேரி மருத்துவமனையில் அவரை சிகிச்சைக்காக சேர்த்திருப்பதாக என்னிடம் சொன்னார். நான் சம்பவத்தை கேள்விபட்டு மருத்துவமனை சென்று எனது மகனை பார்த்தபோது அவருக்கு பின்னந்தலையில் காயங்கள் ஏற்பட்டிருந்தது. அவர் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். மேலும் எனது மனைவியிடம் விபத்து குறித்து கேட்டதற்கு எனது மகன் நிரஞ்சன் பள்ளியில் இருந்து வீட்டிற்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்ததாகவும் அவரை பின் தொடர்ந்து இருசக்கர வாகனத்தில் எனது மனைவியும் இளைய மகன் பிரதீப் என்பவரும் சம்பவ சாலையில் சென்று கொண்டிருந்ததாகவும் அரசு பேருந்து சம்பவ நேரத்தில் சம்பவ சாலையில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்ததாகவும் சம்பவ சாலையின் வேகத்தடையில் நிறுத்தாமல் எனது மகன் சைக்கிளின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக சொன்னார். அங்கிருந்தவர்கள் உதவியுடன் எனது மனைவி மேற்படி விபத்தில் காயம் பட்ட எனது மகனை காவேரி மருத்துவமனையில்

சிகிச்சைக்காக சேர்த்ததாக சொன்னார்கள். சம்பவ சமயத்தில் போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. மேற்படி அரசு பேருந்ததை ஓட்டிய ஓட்டுநர் புதுக்கோட்டை மாவட்டத்தை சார்ந்த ராதா என்று நான் போலீசார் விசாரணையில் தெரிந்து கொண்டேன்.

**குறுக்கு விசாரணை**

1. சம்பவம் பற்றி எனது மனைவி தான் சொன்னார் என்றால் சரிதான். சம்பவம் எவ்வாறு நடைபெற்றது என்று நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.06 14:15:37 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## S.T.C. No.189/2023 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | நிரஞ்சன் | த-பெ | மோகன் |
| ஊர்: | : | வைரவபுரம் | | |
| வயது: | : | 18/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | முதலாம் ஆண்டு கல்லூரி மாணவன் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.04.2026

**எதிரி ஆஜர்.**

---

<u>முதல் விசாரணை .</u>

1. நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து கல்லூரி படித்து வருகிறேன். 2023 ம் வருடம் நான் 10 ம் வகுப்பு காரைக்குடி இரயில்வே கேட் சாலை அருகில் உள்ள மகரிஷி பள்ளியில் பயின்று வந்தேன். பொதுவாக நான் பள்ளிக்கு என்னுடைய சைக்கிளில் செல்வது வழக்கம். 10.01.2023 அன்று பள்ளி முடித்து விட்டு வீட்டிற்கு வருவதற்காக என்னுடைய சைக்கிளில் நான் சென்று கொண்டிருந்தேன். அப்போது என்னுடைய அம்மாவும் தம்பியும் அவர்களுடைய ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தில் எனக்கு பின்னால் சம்பவ சாலையில் வந்து கொண்டிருந்தார்கள். வசந்தீஸ் பேக்கரி அருகில் சம்பவ சாலையில் நான் சாலையை கடந்து சென்று கொண்டிருந்தேன். சம்பவ சாலையில் சம்பவ நேரத்தில் மாலை 4.30 மணியளவில் இடது புறத்தில் சாலையின் வேகத்தடையை கவனிக்காமல் அரசு பேருந்து ஒன்று சற்று வேகமாக வந்து என்னுடைய சைக்கிளின் மீது மோதியது. அதில் நான் மயக்கமுற்று கீழே விழுந்துவிட்டேன். கண் முழித்து பார்த்தபோது நான் KMC மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. மேற்படி விபத்து சம்பவத்தில் என்னுடைய தலையில் காயங்கள் ஏற்பட்டிருந்தது. வலது கையிலும் காயங்கள் ஏற்பட்டிருந்தது. மருத்துவமனையில் இருந்த போது போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். சம்பவ சமயத்தில் விபத்து ஏற்பட்டதில் எனக்கு மயக்கம் ஏற்பட்டதால் பேருந்தின் ஓட்டுநரை என்னால் கவனிக்க இயலவில்லை.

குறுக்கு விசாரணை

1. பேருந்து மோதியவுடன் நான் மயக்கமுற்றதால் என்ன நடந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவ சாலையில் சம்பவ நேரத்தில் ஜன நடமாட்டம் அதிகமாக இருந்தது என்றால் சரிதான். அதிக வாகனங்கள் சென்று கொண்டிருந்தது என்றால் சரிதான். போலீசார் என்னை எப்போது எங்கு விசாரணை செய்தார்கள் என்றால் மருத்துவமனையில் விசாரணை செய்தார்கள் தேதி நினைவில் இல்லை. எனக்கு நடந்த விபத்திற்கு எனது அம்மா கொடுத்த புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.06 14:15:43 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## S.T.C. No.189/2023 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | மேகலா | க-பெ | மோகன் |
| ஊர்: | : | வைரவபுரம் | | |
| வயது: | : | 44/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஆசிரியை | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.04.2026**

**எதிரி ஆஜர்.**

-------------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை தொடர்ச்சி.

மேற்படி விபத்து சமயத்தின் போது எனது மூத்த மகன் நிரஞ்சன் என்பவருக்கு சாலை விபத்து ஏற்படுத்தியவரை என்னால் பார்த்தால் அடையாளம் காண இயலும். ஆஜர் எதிரி தான் சம்பவ சமயத்தில் எனது மகன் மீது அரசு பேருந்தை இயக்கி விபத்தை ஏற்படுத்திய நபர் ஆவார். வழக்கு சம்பந்தமாக போலீசார் சம்பவ சமயத்தில் விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

1. புகாரை எழுதியது யார் என்றால் இளையராஜா என்ற வடக்கு காவல் நிலைய போலீசார் எழுதினார். புகார் எங்கு எப்போது கொடுக்கப்பட்டது என்றால் காரைக்குடி KMC மருத்துவமனையில் இருந்தபோது வாங்கினார்கள். புகாரை எழுதியது நான் இல்லை என்றால் சரிதான். என்னை போலீசார் எங்கு எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் 10.01.2023 அன்று மாலை 4.40 மணியளவில் என்னை விசாரணை செய்தார்கள். என்னுடைய புகாரில் சைக்கிளுக்கு என்ன சேதம் ஏற்பட்டது என்ற விபரம் சொல்லவில்லை என்றால் போலீசார் சைக்கிளுக்கு என்ன ஆனது என்று என்னை கேட்கவில்லை அதனால் நானும் சொல்லவில்லை. சைக்கிளின் எந்த பாகம் பேருந்தின் எந்த பாகத்தின் மீது மோதியது என்ற விபரத்தை புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். பேருந்து பேருந்து நிலையத்தில் இருந்து மேற்கில் இருந்து கிழக்காக சென்றது என்றால் சரிதான். சம்பவ இடத்தின் அருகில் பேருந்து சென்ற வழியில் வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். போலீசார் வரைந்த வரைபடத்தில் உள்ள சம்பவ இடம் நடு ரோட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சம்பவ இடம் நடுரோடு இல்லை என்பதால் மேற்படி வரைபடம்

தவறானது.

2. வரைபடத்தின் படி வடக்கு புறம் தான் எங்களது வீடு தெற்கு புறம் தான் எனது மகன் படிக்கும் பள்ளி என்றால் சரிதான். பேருந்து சென்ற வழியானது இரு பேருந்துகள் செல்லக்கூடிய இரு வழி பாதை என்றால் சரிதான். வரைபடத்தின் படி பேருந்து செல்லவேண்டிய இடத்திற்கு அடுத்தாற்போல் தான் விபத்து நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. பேருந்து சென்ற வழி தவறானது என்று யார் மூலமாக தெரிந்து கொண்டேன் என்றால் அங்கிருந்த நபர்கள் சொன்னார்கள் மற்றும் என்னை விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் இளையராஜா என்பவரும் சொன்னார். மேற்படி பேருந்து கிளை மேலாளர் காரைக்குடி என்பவரின் வாய்மொழி உத்தரவின் பேரில் அந்த வழியில் தான் கல்லூரி சாலைக்கு சென்று பட்டுக்கோட்டை செல்வதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் எங்களுக்கு தெரிந்த வரை அவ்வாறு பேருந்துகள் சென்றது இல்லை. புகாரில் நான் எந்த இடத்தில் நின்றேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடமானது ஜன நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான்.

3. சம்பவ இடத்தில் நிரந்தர கடைகளும் தற்காலிக கடைகளும் அதிகம் உள்ளது என்றால் சரிதான். எனது கணவருக்கு தகவல் சொன்னவரின் பெயர் மற்றும் முகவரி தெரியுமா என்றால் தெரியாது என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் ஆனால் தற்போது எனது கணவருக்கு தெரிந்த வைரக்கண்ணு என்பவர் தகவல் சொன்னதாக தெரிந்து கொண்டேன். நான் சம்பவ இடத்தில் இருந்து கார் ஒன்றின் மூலமாக எனது மகனை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி காரில் அழைத்து சென்றவரை பற்றி எந்த விபரமும் தெரியாது என்றால் சரிதான். புகாரில் எதிரியின் அடையாளம் பற்றியோ அவரை பார்த்தால் தெரியும் என்றும் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை நான் பார்த்திருந்தால் எனது இளைய மகனும் பார்த்திருக்க வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். நானும் எனது இளைய மகனும் மோட்டார் சைக்கிளில் வீட்டிற்கு வேகமாக சென்றுவிட்டோம் என்றும் மூத்த மகன் சைக்கிளில் பின்னால் வந்தபோது விபத்து ஏற்பட்டுள்ளது மேற்படி விபரம் தெரிந்து தான் சம்பவ இடத்திற்கு நான் வந்தேன் என்றாலும் தற்போது காயம்பட்டவர் தனது மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.06 14:15:50 +0530